தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காபி உற்பத்தி 3.47 லட்சம் டன்னாக உயரும்



நடப்பு 2013–14ம் நிதிஆண்டில், நாட்டின் காபி உற்பத்தி, 9 சதவீதம் அதிகரித்து, 3.47 லட்சம் டன்னாக உயரும் என, கர்நாடகா தோட்டப் பயிர் கூட்டமைப்பு (கே.பி.ஏ.,) மதிப்பீடு செய்துள்ளது. இது குறித்து இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை:சென்ற 2012–13ம் நிதியாண்டில், நாட்டின் காபி உற்பத்தி, 3.18 லட்சம் டன்னாக இருந்தது. காபி உற்பத்தியாளர்கள், பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வரும் நிலையிலும், நடப்பு நிதியாண்டில், கூடுதலாக, 29 ஆயிரம் டன் காபி உற்பத்தியாகும் என, தெரிகிறது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில், 75 சதவீத பங்களிப்பை, கே.பி.ஏ., வழங்கி வருகிறது.நடப்பு நிதியாண்டில், அரபிகா வகை காபி உற்பத்தி, 12.5 சதவீதம் வளர்ச்சி கண்டு, 1.11 லட்சம் டன்னாக உயரும். அதே போன்று, ரோபஸ்டா வகை காபி உற்பத்தி, 7.5 சதவீதம் அதிகரித்து, 2.36 லட்சம்டன்னாக உயரும் என, காபி வாரியம் மதிப்பிட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கான காபி உற்பத்தி, 850 கிலோவில் இருந்து, 748 கிலோவாக குறைந்துள்ளது. இருந்த போதிலும், நாட்டின் காபி உற்பத்தி, அதிகரித்து வருகிறது. இந்தியாவை விட, வியட்னாம், 2.6 மடங்கும், பிரேசில், 1.5 மடங்கும் காபி உற்பத்தி செய்கின்றன.இந்தியாவில், காபி பயிர்கள், பூச்சித்தாக்குதலை சமாளித்து, அதிகபட்ச உற்பத்தியை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை, கே.பி.ஏ., எடுத்து வருகிறது. இதற்காக, பிரேசில் காபி துறையில் நிபுணத்துவம் பெற்ற இரண்டு பேருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இவர்கள், காபி உற்பத்தி திறனை அதிகரிக்க

தேவையானஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும், இந்திய விவசாயிகளுக்கு வழங்குவார்கள். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### வேளாண் பொருட்களுக்கு7 சதவீத வட்டியில் கடன்



சென்னை:'வேளாண் விளை பொருட்களுக்கு அளிக்கப்படும் அடமான கடனுக்கு, மத்திய அரசின் வட்டி குறைப்பு சலுகை நடப்பு நிதியாண்டிலும் தொடரும் என, நபார்டு வங்கி அறிவித்துள்ளது. இதுகுறித்து, வங்கியின் தலைமை பொதுமேலாளர், லலிதா வெங்கடேசன் கூறியதாவது:பொதுத் துறை மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம், பயிர் கடன் பெற்றுள்ள விவசாயிகள், விளைபொருள்களை சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து, சந்தை விலைக்கு ஏற்ப விற்பனை செய்யலாம். கடந்தாண்டு சேமிப்புக் கிடங்குகளில் சேமிக்கப்பட்டுள்ள விளை பொருள்கள் மீது, 3 லட்சம் ரூபாய் வரையில் கடன் வழங்கப்பட்டது. ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கு, 7 சதவீத வட்டி என நிர்ணயிக்கப் பட்டது. கூட்டுறவு வங்கிகள் மூலம் அளிக்கப்படும் இக்கடனுக்காக, 4.5 சதவீத வட்டியில் மறு நிதியை, நபார்டு வங்கி அளித்து வருகிறது.இவ்வாறு, அவர் கூறினார்.

### கோமாரி நோய்க்கு 15 மாடுகள் பலி

ஆர்.கே.பேட்டை:கோமாரி நோய் தாக்கியதால், ஒரே கிராமத்தில், 15 மாடுகள் பலியாகி உள்ளன. இதனால், கிராமத்தில் மருத்துவ முகாம் அமைத்து, சிகிச்சை அளிக்க விவசாயிகள் கோரி உள்ளனர்.ஆர்.கே.பேட்டை அடுத்த சஞ்சீவிபுரம் கிராமத்தில், கோமாரி நோய் தாக்குதலால் கடந்த ஒரு வாரத்தில், 15 மாடுகள் பலியாகி உள்ளன. நேற்று, இரண்டு கன்றுக்குட்டிகள், ஒரு பசு பலியாகின. இதனால், விவசாயிகள் பெரும் பாதிப்பு அடைந்து உள்ளனர். இதுகுறித்து, அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:நோய்

தாக்கிய மாடுகளுக்கு, கால் குளம்பு, நாக்கு மற்றும் மூக்கு உள்ளிட்டவற்றில் புண் ஏற்பட்டுள்ளது. இதனால், நிற்க முடியாமலும், உணவு உட்கொள்ள முடியாமலும் உள்ளன. கால்நடை மருத்துவமனைக்கு ஓட்டிச் செல்லவும் முடியாததால், வேப்ப எண்ணெய், கற்பூரம் உள்ளிட்டவற்றை, புண் ஏற்பட்ட இடங்களில் தடவி வருகிறோம். நோய் இதற்கு கட்டுப்படாததால், மாடுகளின் இறப்பு தொடர்ந்து வருகிறது. மருத்துவர்கள் முகாம் அமைத்து, மாடுகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## சின்னசேலம் பகுதி விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை

சின்னசேலம்;சின்னசேலம் பகுதி விவசாயிகளுக்கு மாற்று பயிர் செய்வது மற்றும் பயிர் காப்பீடு குறித்து வேளாண் துறை சார்பில் ஆலாசனை வழங்கினர்.சின்னசேலம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோகன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:சின்னசேலம் தாலுகாவில் பருவ மழை தள்ளிப் போவதால் நெற் பயிரை தவிர்த்து உளுந்து சாகுபடி செய்ய வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கினர். வம்பன் 4, வம்பன் 5 ஆகிய ரகங்கள் குறைந்த தண்ணீர் அதிக லாபம் கிடைக்கும். ஆதார விதையை பயன்படுத்தி சான்று விதைகளை உற்பத்தி செய்வதால் உற்பத்தி ஊக்கத் தொகை யாக வேளாண்மைத் துறை சார்பில் ரூ.30 வழங்கப்படுகிறது. சந்தை விலை ரூ. 50, ஊக்கத் தொகை ரூ. 30 சேர்த்து ஒரு கிலோ ரூ.80க்குகிடைக்கும். லாபகரமான உளுந்து சாகுபடி செய்யலாம்.

பயிர் காப்பீடு: சம்பா பட்டத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகள் அடுத்த மாதம் 15ம் தேதிக்குள் நெற்பயிரை காப்பீடு செய்ய வேண்டும். கடன் பெறாத விவசாயிகள் பயிர் காப்பீட்டிற்கு 116 ரூபாயை சேமிப்பு கணக்கு வைத்துள்ள வங்கியில் செலுத்த வேண்டும். பயிர் கடன் பெறும் விவசாயிகளுக்கு தாங்கள் செலுத்தும் தொகையில் இருந்து வங்கி காப்பீட்டு பிரிமியம் மூலம் காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.தமிழ்நாடு அரசின் பிரீமிய மானிய உதவியுடன் உரிய காலத்திற்குள் தொகையினை செலுத்தி தங்கள் பயிரை காப்பீடு செய்யவும்.

## மேட்டூர் அணை நீர்திறப்பு குறைப்பு

மேட்டூர்: வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 3,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 8,500 கனஅடி நீர்

திறக்கப்பட்டது. வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக டெல்டா மாவட்டங்களில் பல இடங்களில் மழை பெய்கிறது. இதனால், பாசனத்துக்கான நீர் தேவை குறைந்ததால் வினாடிக்கு, 8,500 கனஅடியாக இருந்த நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 3,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 79.260 அடியாகவும், நீர் இருப்பு, 41.223 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 5,309 கனஅடி நீர்வந்தது.

## மாவுப்பூச்சித் தாக்குதல் அதிகரிப்பு பயிர் பாதுகாப்பு பின்பற்ற அறிவுரை

நாமக்கல்: "பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்' என, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில், மாவுப்பூச்சிகள், தாக்குதல் சில பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளது. மாவுபூச்சியானது மரவள்ளி, செம்பருத்தி, கொய்யா, தேக்கு, வெண்டை, கத்தரி, தக்காளி, பருத்தி, பப்பாளி போன்ற பயிர்களையும், பார்த்தீனியம் மற்றும் மல்பரி போன்றவற்றையும் தாக்க வாய்ப்பு உள்ளது. மாவுப்பூச்சியினால், பயிர்கள் பாதிக்கப்பட்டு, இலைகள் உருமாறி சிறுத்து காணப்படும். மாவுப்பூச்சிகள் பயிரின் தண்டுகள், இலைகளின் அடிப்பாகம் மற்றும் இலைக்காம்பு இடுக்குகளில் காணப்படும். மாவுப்பூச்சிகள் மெழுகு போன்ற மெல்லிய வெள்ளை நிற உறையயால் சூழ்ந்து காணப்படும். மாவுப்பூச்சிகள் வெளியேற்றும் தேன் போன்ற திரவத்தை உண்ண எறும்புகள் ஊர்ந்து செல்வதை காணமுடியும். இலையின் மேற்பரப்பில் கரும்பூஞ்சாணம் படர்ந்து காணப்படும். மாவுப்பூச்சியின் தாக்குதலினால், இலைகள் மஞ்சள் நிறமாகும். கணுக்களிடையே இடைவெளி குறையும். பொதுவாக இப்பூச்சிகள் ஜனவரி முதல், ஆகஸ்ட் முடிய காலத்தில் பயிரைத் தாக்கும். வறட்சியினால் ஏற்படும் சூழ்நிலையில், எப்போதும் தாக்க வல்லது. நல்ல மழை பெய்யும் போது, இப்பூச்சிகள் அழியும். மாவுப்பூச்சிகள் களைச் செடிகளில் அடைக்கலம் ஆவதால், துத்தி, பார்த்தீனிய, குப்பைமேனி, தும்பை, வெட்டுக்காய் பூண்டு, சாரணை, துளசி போன்ற மாற்று உறைவிடப் பயிர்களை, வயலில் இருந்து அகற்ற வேண்டும். பாதிப்பு அதிகமாக இருந்தால், ஒட்டுமொத்தமாக அடிவெட்டு செய்து செடிகளை தீயிட்டு அழிக்க வேண்டும். அடிவெட்டு செய்தவுடன், 0.2 சதம் ப்ரோஃபனோபாஸ், 50 சதவீதம் இசி மருந்தை, இரண்டு மி.லி., என்ற அளவில், ஒரு லிட்டர் நீரில் கலந்து இந்த வீதத்தில்,

200 லிட்டர் மருந்து கரைசல் தயாரித்து கைத்தெளிப்பான் மூலம், பயிர் நன்கு நனையும்படி மருந்தடிக்க வேண்டும். மருந்து கரைசலில், ஒட்டும் திரவம் டீபால் கலக்க வேண்டும். முதல் தெளிப்பில்இருந்து, பத்து நாட்கள் கழித்து டைமீத்தேயேட் மருந்து, மூன்று மில்லி, ஒரு லிட்டர் அளவில் கலந்து, 200 லிட்டர் மருந்து கரைசல் தயாரித்து தெளிக்கலாம். அதனுடன் வேம்பு மருந்து கலப்பது நல்லது. மாவுப்பூச்சி தாக்கப்பட்ட பகுதியில் இருந்து நாற்றுகள், விதை கரணைகள் ஆகியவற்றை பிறபகுதிகளுக்கு எடுத்துச் செல்லக்கூடாது. இப்பூச்சிகளை அழிக்கும் "அசிரோபேகஸ் பப்பாயே' என்ற நன்மை செய்யும் பூச்சிகளை வயலில் விடலாம். விவசாயிகள் அனைவரும் ஒட்டு மொத்தமாக, ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கால்நடை மருத்துவ கல்லூரி மாணவர்கள் கல்விப் பயணம்

நாமக்கல்: கோவை வனவிலங்கு காட்சியகத்தில், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள், விலங்கு பராமரிப்பு தொழில் நுட்பங்களை அறிந்தனர். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த, மூன்றாம் ஆண்டு மாணவ, மாணவியர், கோவை வனவிலங்கு காட்சியகத்துக்கு கல்விப்பயணம் சென்றனர். அங்கு, விலங்குகள் பராமரிப்பு பற்றியும், குதிரைப்பண்ணை மற்றும் கறவை மாட்டு பண்ணைகளில் பராமரிப்பு தொழில் நுட்பத்தையும் களப்பயிற்சியாக செய்து அறிந்தனர். இதற்கான ஏற்பாடுகளை, கல்லூரி கால்நடை உற்பத்தி மற்றும் வேளாண் துறையினர் செய்தனர்.

## பயிர் காப்பீட்டை அமல்படுத்த அமராவதி விவசாயிகள் கோரிக்கை

ஈரோடு: மத்திய, மாநில அரசுகள், அமராவதி பாசன பகுதி விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டு திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்கம் சார்பில், கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்ட விவசாயிகள் ஆலோசனை கூட்டம், மாநில பொதுச்செயலாளர் லிங்கம் சின்னசாமி தலைமையில் நடந்தது. விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர் காப்பீடு திட்டம், கடந்த 2011 அக்டோபர் மாதம் வரையிலும், 62 லட்சம் விவசாயிகளுக்கு, 972 கோடி ரூபாய் இழப்பீடு செய்ததாக, பயிர் காப்பீட்டு கழகம் அறிவித்துள்ளது. போதிய மழை இல்லாமை, கடுமையான வெயில், கடுங்குளிர்

மோசமான பருவ நிலைகளை அடிப்படை ஆதாரமாக வைத்து, பயிர் காப்பீடு திட்டம் அமலாகிறது. மத்திய, மாநில அரசுகள், 50 சதவீத மானியம் வழங்குகிறது. அமராவதி பாசன பகுதியில் இடைக்கால பயிர் காப்பீட்டு திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனப்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### வாழைக்கு ஊடுபயிராக சின்ன வெங்காயம்

சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பகுதியாகும். இங்குள்ள மக்கள் விவசாயம் மற்றும் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் வாழையை முக்கிய பயிராக நடவு செய்து வருகின்றனர். வாழை பயிரின் இடையே செண்டுமல்லி, பூசணி உள்ளிட்ட ஊடுபயிர்களை கூடுதல் வருமானத்துக்காக பயிரிட்டு வருவது வழக்கம். சத்தியமங்கலம் பகுதியில் உள்ள விவசாயிகள், வாழைக்கு ஊடுபயிராக வெங்காயத்தை நடவு செய்துள்ளனர். தொடர் மழையால், வெங்காயத்தின் வளர்ச்சி செழிப்பாக உள்ளது. அதே சமயம் கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனையான சின்னவெங்காயம், தற்போது, 60 முதல், 80 ரூபாய் வரை விற்பனையாவதால், வாழை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து வாழை விவசாயிகள் கூறுகையில், "இன்னும் ஒரு மாதத்துக்கு இதே விலையில் வெங்காயம் விற்பனையானால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும்,' என்றனர்.

### அறுவடைக்கு அரசு இயந்திரம் நெல் விவசாயிகள் கோரிக்கை

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில், நெல் அறுவடைக்கு அரசு இயந்திரங்களை கொண்டு வர வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் பங்களாபுதூர், காசிபாளையம், பாரியூர், கரட்டடிபாளையம், கூகலூர், கள்ளிப்பட்டி, புஞ்சை துறையம்பாளையம், டி.என்.பாளையம், அரக்கன்கோட்டை, அரக்கரைகொடிவேரி உள்ளிட்ட பகுதிகளில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வசதி பெறுகிறது. இப்பகுதியில், 15 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டு, அறுவடை பணிகளும் தீவிரமாக நடந்து வருகிறது. துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெல் அறுவடை இயந்திரங்கள், அறுவடைக்காக பயன்படுத்தப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில், கோபி, ஈரோடு ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளன.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில், 15 ஆயிரம் முதல், 18 ஆயிரம் ஏக்கர் வரை நெல் பயிரிடப்படுகிறது. நெல் அறுவடை பணி தீவிரமடைந்த நிலையில், இரண்டு நெல் அறுவடை இயந்திரங்கள் போதுமானதாக இல்லை. துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில், முதலில் பதிவு செய்துள்ள விவசாயிகள், சிபாரிசு அடிப்படையில், என நெல் அறுவடை இயந்திரங்கள் வழங்கப்படுகிறது. எனவே, தனியார் நெல் அறுவடை இயந்திரத்தையே, பெரும்பாலான விவசாயிகள் நம்பி உள்ளனர். இதனை பயன்படுத்தி கூடுதல் வாடகையை தனியார் இயந்திர உரிமையாளர்கள் வசூலிப்பதால், விவசாயிகள் அவதியில் உள்ளனர். தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் கூறியதாவது: தனியார் மூலம் நெல் அறுவடைக்கு மணிக்கு, 2,000 முதல், 2,200 ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையில் உள்ள நெல் அறுவடை இயந்திரங்களுக்கு மணிக்கு, 850 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் இரண்டு நெல் அறுவடை மட்டுமே உள்ளது. கரூர், நாமக்கல், தேனி, திருப்பூர் உள்ளிட்ட பகுதியில் அரசு நெல் அறுவடை இயந்திரங்கள் தற்போது பயனின்றி உள்ளது. எனவே, அப்பகுதியில் உள்ள நெல் அறுவடை இயந்திரங்களை கொண்டு வந்தால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை விவசாயிகள் பயனடைவர். கதிர் அடிக்கும் இயந்திரங்கள் பற்றாக்குறை காரணமாக, கூலி ஆட்கள் மூலம் நெல் அறுவடை செய்யப்பட்டு, நெல் அறுவடை இயந்திரம் மூலம் கதிர் அடிக்கப்படுகிறது. வெளி மாவட்டத்தில் உள்ள இயந்திரங்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

## மானிய தொகையை பயன்படுத்திகொள்ள தேயிலை விவசாயிகளுக்கு அழைப்பு

மஞ்சூர்:"மானிய தொகையை தேயிலை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்' என, தேயிலை வாரியம் அழைப்பு விடுத்துள்ளது.மஞ்சூர் அடுத்துள்ள கீழ்குந்தா கிராமத்தில் உள்ள சமுதாய கூடத்தில் சிறு விவசாயிகளுக்கான கருத்தரங்கு மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. குந்தா சிறு தேயிலை சங்க செயலாளர் ராணி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தேயிலை வாரியம் துணை இயக்குனர் ஹரி கிருஷ்ணன் பேசியதாவது: உபாசி வேளாண் அறிவியல் நிலையம், கடந்த 20 ஆண்டுக்கு மேலாக சிறு விவசாயிகளின் மேம்பாட்டிற்காக தேயிலை வாரியத்தின் உதவியுடன் செயல்படுகிறது. பயிர் மாற்றும் திட்டம், தேயிலை செயல் விளக்க மாதிரி தோட்டம், குந்தா தேயிலை மறுநடவு திட்டம், தேயிலை தரமேம்பாட்டுத் திட்டம், இலவச கவாத்து

சிறப்பு திட்டம், தேயிலை புது, மறு நடவு பயிற்சி, தேயிலை புனர் அமைப்பு கவாத்து பயிற்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தரமேம்பாட்டு திட்டத்தின் மூலம் தேயிலையின் தரத்தை உயர்த்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழு அல்லது தேயிலை விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உபாசி வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் ஊக்கமும், கண்காணிப்பும் செய்யப்பட்டு வருகிறது. சுய உதவிக்குழுக்கள், சிறு தேயிலை விவசாயிகள் சங்கங்கள் இத்தகைய திட்டங்களை பயன்படுத்தி கொள்ளலாம். மேலும், ஒவ்வொரு பசுந்தேயிலை கொள்முதல் மையத்துக்கும் அதிகபட்சமாக 30 ஆயிரம் ரூபாய், 25 ஏக்கருக்கு ஒரு கவாத்து இயந்திரம் வாங்க 35 ஆயிரம் ரூபாய் மானியம், சிறு தேயிலை தொழிற்சாலை அமைப்பதற்கு மொத்தம் செலவில் 25 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. சிறு தேயிலை விவசாயிகள் மானிய தொகையை பயன்படுத்தி கொள்ள குன்னூர் தேயிலை வாரியத்தை அணுக வேண்டும்.இவ்வாறு ஹரிகிருஷ்ணன் பேசினார். சிறு தேயிலை விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் தேயிலை வாரிய அதிகாரிகள் விளக்கமளித்தனர்.தேயிலை வாரிய அலுவலர்கள் புவனேஷ், விவேக் முன்னிலை வகித்தனர். குந்தா பகுதி தேயிலை விவசாயிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## மஞ்சூரில் கடும் மேகமூட்டம்தேயிலைக்கு கொப்புள நோய்

மஞ்சூர்:மஞ்சூரில் தொடரும் கடும் மேகமூட்டத்தால் தேயிலையை கொப்புள நோய் தாக்கி மகசூல் இழப்பு ஏற்படுவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் தென் மேற்கு பருவமழை பரவலாக பெய்ததால், தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து கணிசமாக உயர்ந்தது. மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் கடந்த ஆகஸ்ட் மாதம் நிலவரப்படி சுமார் 6 கோடி கிலோ வரைக்கு பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பசுந்தேயிலை வரத்து அதிகரித்த காரணத்தால் "கோட்டா' முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், குறிப்பிட்ட நாளில் தோட்டங்களில் உள்ள பசுந்தேயிலையை பறிக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். இந்நிலையில், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக பகல் நேரத்தில் வெயில் தென்படாமல் கடுமையான மேகமூட்டம் காணப்படுகிறது. இலைகளில் மீது ஈரப்பதம் 12 மணிக்கு மேல் தொடர்வதால் இளம் தண்டுப்பகுதி மற்றும் இளம் இலைகள் படிப்படியாக பாதிக்கப்பட்டு வருகிறது. இந்த கொப்புள நோயின்

தாக்கம் அதிகரித்தால், மகசூல் இழப்பு ஏற்பட்டு,தேயிலை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

### நாற்று உற்பத்தி பயிற்சிக்கு அழைப்பு

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குழித்தட்டுகள் மூலம் காய்கறி நாற்று உற்பத்தி பயிற்சி பெறலாம்' என, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் நவ., 20ம் தேதி காலை 10 மணி முதல், 1 மணி வரை குழித்தட்டு மூலம் காய்கறி நாற்று உற்பத்தி குறித்த தொழில்நுட்ப பயிற்சி நடக்கிறது. பயிற்சியில், குழித்தட்டுகளில் விதைப்பு மற்றும் பராமரிப்பு, நாற்றுகளை பூச்சி, நோய்களிடமிருந்து பாதுகாத்தல் மற்றும் குழித் தட்டுக்களில் நாற்று தயாரிப்பதால் ஏற்படும் நன்மைகள் ஆகியவை குறித்து, வீடியோ கான்ஃபரன்ஸ் மற்றும் செயல் விளக்கங்கள் மூலம் 20 விவசாயிகளுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் நேரில் அல்லது, 04328- 293592, 293251, 9790491566 ஆகிய நம்பரில் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு, தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நோயால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு: விவசாயிகள் கோரிக்கை

திருவாரூர்: "கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு தொகையை உடனே வழங்க வேண்டும்' என, தமிழக அரசுக்கு விவசாயிகள் மற்றும் கால்நடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஓராண்டுக்கு முன் எடுத்த, 19வது கணக்கெடுப்பின்படி, ஒரு லட்சத்து, 77 ஆயிரம் மாடுகள் இருப்பது தெரியவந்தது. பின் சினை மாடுகள், கன்று ஈன்ற நிலையில் மாடுகள் எண்ணிக்கை, 2 லட்சத்துக்கு மேல் உயர்ந்தன. இந்நிலையில் மத்திய அரசின் மூலம், ஒரு லட்சத்து, 70 ஆயிரம் டோஸ் தடுப்பூசி மருந்துகள் வரவழைக்கப்பட்டன. இதில், 77 சதவீத தடுப்பூசிகள், மாடுகளுக்கு போடப்பட்டு, 25 சதவீத மருந்துகள், கால்நடைத்துறை இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. போதிய அளவு தடுப்பூசி போடாததால், கோமாரி நோய் வைரஸ் கிருமி தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 10 ஒன்றியங்களில் கோமாரி நோய் தாக்கியுள்ளன. குடவாசல், நன்னிலம் ஒன்றியங்களில் அதிகளவு வைரஸ் கிருமி தாக்கி,

300க்கும் மேற்பட்ட மாடுகள் கோமாரி நோயில் பலியாகின. 5,000த்துக்கும் மேற்பட்ட மாடுகள், நோய் கிருமி தாக்கி, உயிருக்கு போராடும் சூழல் ஏற்பட்டுள்ளது. கால்நடைத்துறை சார்பில் வழங்கப்படும் நோய் எதிர்ப்பு, தடுப்பு ஊசி மூலம் நோய் கிருமி கட்டுப்படுத்த முடியாததால், இயற்கை முறையில் மருத்துவம் செய்ய கால்நடைத்துறை அதிகாரிகள், விவசாயிகளை அறிவுறுத்தியுள்ளனர்.இந்நிலையில், 45 மாடுகளே கோமாரி நோய் இறந்துள்ளதாக கால்நடைத்துறையினர் புள்ளி விபரம் கூறுகின்றனர். கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு தொகையை, அரசு உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

### வெளி மாநில வரத்தால் புளி விலை குறைவு

நத்தம் : திண்டுக்கல், நத்தம் பகுதியில் மழை இல்லாததால், புளி மகசூல் குறைந்துள்ளது. எனினும், வெளி மாநில புளி வரத்தால், விலை குறைந்துள்ளது. தேனி, விருதுநகர், தாராபுரம், வெள்ளக்கோவிலை போல நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் புளி விளைச்சல் அதிகம். நத்தம், சாணார்பட்டி, செங்குறிச்சி உள்ளிட்ட இடங்களில், 10 ஆயிரம் ஏக்கரில் புளியமரங்கள் உள்ளன. இப்பகுதியில், புளியில் விதை எடுத்து பதப்படுத்தும் தொழிலில், 3000 பேர் உள்ளனர். புளி விலையை நிர்ணயம் செய்யும் சந்தைகளில், நத்தம் முக்கியமானது. இந்த ஆண்டு, விளைச்சல் குறைந்ததால், புளி விலை உயரும் என, கருதப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டின் இருப்பு மற்றும் ஆந்திரா, கர்நாடகம், மத்தியப் பிரதேசம் மாநிலங்களில் இருந்து, புளி வரத்து உள்ளது; இதனால், விலை குறைந்துள்ளது.விதைப்புளி, ஒரு கிலோ ரூ.22 முதல் ரூ.25க்கும்; விதை எடுத்தது, ரூ.50 முதல் ரூ.55க்கும் விற்கப்படுகிறது.

### மதுரை, திண்டுக்கல் பாசனத்திற்காக வைகையில் மீண்டும் தண்ணீர் திறப்பு

ஆண்டிபட்டி : மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்காக, வைகை அணையில் நேற்று மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஜூன், ஜூலை மாதங்களில் பெய்த தென் மேற்கு பருவ மழையால், பெரியாறு அணையில் திறக்கப்பட்ட நீர், வைகை அணைக்கு வந்தது. வைகை அணை நீர் மட்டம் 60 அடியாக உயர்ந்த நிலையில், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களின் இருபோக பாசனத்திற்காக, அணை செப்., 25 ல், தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பின், தேனி மாவட்டத்தில் எதிர்பார்த்த மழை இல்லாததால், அணை நீர் மட்டம் உயரவில்லை.

இதனால், முறைப்பாசனம் அமல்படுத்தப்பட்டு, அவ்வப்போது பாசனத்திற்கு திறக்கப் படுவதும், சில நாட்கள் நிறுத்தப்படுவதும் தொடர்ந்தது. நீர் மட்டம் 45.64 அடியான போது, இருப்பில் உள்ள நீரை கருத்தில் கொண்டு பாசனத்திற்காக, திறக்கப்பட்ட தண்ணீர் நவ., 3ல் நிறுத்தப்பட்டது. தற்போது, 12 நாட்களுக்குப்பின், நேற்று மீண்டும் பாசனத்திற்காக, வினாடிக்கு 1600 கன அடி வீதம், நீர் திறக்கப்பட்டது. மதுரை, ஆண்டிபட்டி- சேடபட்டி குடிநீர் திட்டங்களுக்காக, வினாடிக்கு 60 கன அடி நீர் வழக்கம்போல் வெளியேற்ற படுகிறது. நவம்பரில் முழு அளவில் நிரம்பி இருக்க வேண்டிய வைகை அணையில், நீர் மட்டம் நேற்று காலை 48.52 அடியாக இருந்தது. அணையின் மொத்த உயரம் 71 அடி. நீர் வரத்து வினாடிக்கு 493 கன அடியாக இருந்தது. தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டும் பொய்த்ததால் பெரியாறு, வைகை அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லை. இதனால், இந்த ஆண்டும் விவசாய பணிகளை முழு அளவில், மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதே நிலை நீடித்தால், வரும் கோடையில், 5 மாவட்டங்களில், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

## தென்னை வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம்

புதூர் : தூத்துக்குடி அருகே உள்ள வாகைக்குளம் ஸ்காட் வேளாண் அறிவியல் மையத்தில் தென்னை மரத்தில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் மரம் ஏறும் கருவி கொண்டு மரம் ஏறும் பயிற்சியின் முதல் கட்ட 6 நாட்கள் இலவச பயிற்சி முகாம் நடந்தது. முகாமை வாகைக்குளம் ஸ்காட் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் அழகுகண்ணன் தலைமை வகித்து துவக்கி வைத்து பேசினார். தொழில் நுட்ப வல்லுநர் சீனிவாசன் வரவேற்றார். சென்னை தென்னை வளர்ச்சி வாரிய தொழில் நுட்ப வல்லுநர் செல்வக்குமார் கலந்து கொண்டு தென்னை மரம் ஏறும் கருவியின் பயன்பாடுகள் குறித்து விரிவுரை செய்து இயக்கி காட்டி பயிற்சி அளித்தார். பூச்சியல் துறை வல்லுனர் அசோக் குமார் தென்னையில் பூச்சி நோய் கட்டுப்பாடு பற்றிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் செய்து கலந்து கொண்ட விவசாயிகளின் சந்தேகங்களுக்கு கலந்துரையாடல் செய்து விளக்கம் அளித்து பேசினார். தொடர்ந்து தென்னை சாகுபடியில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் பற்றிய நேரடி விளக்கங்களை உழவியல்துறை தொழில் நுட்ப வல்லுநர் முருகன் கலந்து கொண்டு விளக்கினார். விழா ஏற்பாடுகளை தொழில் நுட்ப வல்லுனர்கள் அசோக்குமார்,

வெங்கடேஷ் இணைந்து செய்தனர். மேலும் வாகைக்குளம் ஸ்காட் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அழகுகண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது : நமது தூத்துக்குடி மாவட்டத்தில் தென்னையில் பூச்சி நோய் தாக்குதல் மற்றும் அறுவடைக்கு ஆள் பற்றாக்குறையை போக்கும் விதத்தில் வாகைக்குளம் ஸ்காட் வேளாண் அறிவியல் மையம், மற்றும் சென்னை தென்னை வளர்ச்சி வாரியம், இணைந்து மேலும் 2 கட்ட இலவச பயிற்சி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் 18 யிலிருந்து 45 வயதுடைய விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொள்ளலாம், மேலும் வரும் வாரத்தில் 2ம் கட்ட பயிற்சி (நவம்பர்) 18 முதல் 23ம் தேதி வரை 6 நாட்கள், மற்றும் 3ம் கட்ட பயிற்சி 25ம் தேதி முதல் 30ம் தேதி 6 நாட்கள் வரை இலவச பயிற்சியாக நடைபெற உள்ளது. எனவே கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். கலந்து கொண்டு பயிற்சி பெறும் அனைவருக்கும் ரூ4500 மதிப்புள்ள தென்னை மரம் ஏறும் கருவி இலவசமாக வழங்கப்படும். மேலும் விரிவான தொடர்புக்கு 9942978580 மற்றும் 7598869175 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொண்டு பயன் பெற வேண்டும் என்று கூறியுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## அமோக நெல் விளைச்சல் 4½ லட்சம் டன் அரிசியை விற்க தாய்லாந்து திட்டம்



பாங்காக்,

தாய்லாந்து நாட்டில் நடப்பு ஆண்டில் நெல் விளைச்சல் 3 கோடி டன்னுக்கு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கிறது. அதுபோல கையிருப்பிலும் பல லட்சம் டன் அரிசி இருக்கிறது. எனவே 4½ லட்சம் டன் அரிசியை விற்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்காக சர்வதேச டெண்டர் கோரி இருக்கிறது. யாருக்கு விற்பனை செய்யலாம் என்பதை வருகிற 19–ந்தேதி முடிவு செய்கிறார்கள்.

## திண்டுக்கல், மதுரை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு



ஆண்டிப்பட்டி

மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து 2 வாரங்களுக்கு பிறகு மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மேலும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால் அணைக்கு நீர்வரத்தும் குறைந்து உள்ளது.

<u>வைகை அணை</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை அமைந்துள்ளது. 71 அடி உயரமுள்ள வைகை அணைக்கு பிரதான நீர்ஆதாரமாக விளங்கும் வைகை ஆற்றில் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக போதிய அளவு நீர்வரத்து இல்லை. முல்லைப் பெரியாற்றில் திறக்கப்படும் தண்ணீர் மட்டுமே வைகை அணைக்கு தற்போது வந்து கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக வைகை அணை நீர்மட்டம் சீராக உயர்வதும், பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் போது ‘கிடு,கிடு’வென குறைந்து வருவதும் கடந்த சில மாதங்களாக தொடர்கிறது. வைகை அணை மதுரை மாநகர மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்குவதால் அணையில் குறைந்த அளவு தண்ணீர் இருப்பை கருத்தில் கொண்டு வைகை பாசனப் பகுதிகளில் இந்த ஆண்டு முறைப்பாசனமும் அமல்படுத் தப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த 3–ந்தேதி வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் வைகை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் வடகிழக்கு பருவ மழை பெய்து நீர்வரத்து ஏற்படும் என்று பொதுப்பணித்துறை எதிர்பார்த்தனர். ஆனால் மழை பெய்ய வில்லை.

வைகை ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சில நாட்கள் பெய்த மழையின் காரணமாக ஆற்றில் லேசான நீர்வரத்து ஏற்பட்டு கண்டமனூரை தாண்டுவதற்குள் தண்ணீர் வறண்டுவிட்டது. இதனால் வைகை ஆற்றில் நீர்வரத்து இன்றி, அணையின் நீர்மட்டம் கடந்த சில நாட்களுக்கு முன்பு 45 அடிக்கும் கீழே குறைந்தது.

<u>தண்ணீர் திறப்பு</u>

முல்லைப்பெரியாறு அணையில் திறக்கப்பட்ட தண்ணீர் சராசரியாக வினாடிக்கு 500 கனஅடி அளவில் மட்டுமே வைகை அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு பிறகு வைகை அணையில் இருந்து நேற்று அதிகாலை 6 மணி முதல் மீண்டும் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

வினாடிக்கு 1,600 கனஅடி வீதம் மதுரை, மேலூர், திண்டுக்கல் பகுதி பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதை அடுத்து ஏற்கனவே நீர்இருப்பு குறைவாக உள்ள வைகை அணையின் நீர்மட்டம் மேலும் குறையும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

நேற்றைய நிலவரப்படி வைகை அணையின் நீர்மட்டம் 48.52 அடியாக காணப்பட்டது. அணையில் இருந்து பாசனத்திற்காகவும், மதுரை மாநகர மக்களின் குடிநீர் தேவைக்கும் சேர்த்து வினாடிக்கு 1,660 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 493 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் மொத்த நீர்இருப்பு 1,806 மில்லியன் கனஅடியாக உள்ளது.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 117.20 அடியாக காணப்பட்டது. அணையில் இருந்து வினாடிக்கு 501 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 502 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் மொத்த நீர் இருப்பு 2,123 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது.

பெரியாறு அணையில் 19.2 மில்லிமீட்டர், தேக்கடியில் 22.4 மில்லி மீட்டர் அளவில் இரண்டு இடங்களில் மட்டுமே மழை பெய்துள்ளது. தேனி மாவட்டத்தில் எந்த பகுதியிலும் மழை பெய்யவில்லை.

## டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு

சேலம்

டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டது.

<u>தண்ணீர் திறப்பு</u>

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக கடந்த 2 வாரங்களாக வினாடிக்கு 8 ஆயிரத்து 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. இந்த நிலையில் டெல்டா பாசன பகுதியில் தண்ணீர் தேவை குறைந்ததால் நேற்று முன்தினம் முதல் டெல்டா பாசனத்திற்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

<u>நீர்மட்டம் உயர்வு</u>

கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டதால் கடந்த 2 வாரங்களாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. தற்போது தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டதின் காரணமாக மீண்டும் நீர்மட்டம்

உயர்ந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 79.26 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 5 ஆயிரத்து 309 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை ‘கிடுகிடு’ உயர்வு 396 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று 6 காசுகள் உயர்ந்து, 396 காசுகள் என்ற புதிய உச்சத்தை தொட்டு உள்ளது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் கடந்த சில நாட்களாக முட்டை விலை கிடுகிடு என உயர்ந்து வருகிறது. கடந்த 12–ந் தேதி நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை விலை 390 காசுகளாக உயர்ந்தது.

இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை மேலும் 6 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 396 காசுகள் என்ற புதிய உச்சத்தை தொட்டு உள்ளது.

பிற மண்டலம்

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–387, ஐதராபாத்–373, விஜயவாடா, தனுகு–370, பார்வாலா–398, மும்பை–411, மைசூர்–380, பெங்களூர்–380, கொல்கத்தா–425, டெல்லி–415.

கறிக்கோழி கிலோ ரூ.42–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.4 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.46 ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.61–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

<u>புதிய உச்சத்தை தொட்டது</u>

நாமக்கல் மண்டலத்தில் இதுவரை 385 காசுகளே முட்டையின் அதிகபட்ச கொள்முதல் விலையாக இருந்து வந்தது. தற்போது 396 காசுகள் என்ற புதிய உச்சத்தை முட்டை கொள்முதல் விலை தொட்டு உள்ளதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். அதேசமயம் முட்டையின் சில்லரை விற்பனை 450 காசுகள் வரை உயர்ந்து விட்டதால், நுகர்வோர் கவலை அடைந்து உள்ளனர்.

## தேயிலைக்கு மாத விலை ரூ.13 நிர்ணயம்



மஞ்சூர் கூட்டுறவு தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு மாத விலையாக 13 ரூபாய் 50 காசு விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

<u>கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்</u>

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றது. இந்த தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக இருக்கும் சிறு விவசாயிகள் பச்சை தேயிலையை வினி யோகம் செய்து வருகிறார்கள்.

விவசாயிகள் வினியோகம் செய்யும் பச்சை தேயிலைக்கு மாதந்தோறும் குன்னூர் இன்கோசர்வ் நிர்வாகம்விலை நிர்ணயம் செய்து வருகிறது. இதில் கட்டபெட்டு கூட்டுறவு தேயிலை தொழிற் சாலை தவிர மற்ற அனைத்து தொழிற் சாலைகளிலும் மாத விலை நிர்ணயிக்கப்படுகிறது.

பச்சை தேயிலைக்கு ரூ.13 விலை நிர்ணயம்

கடந்த அக்டோபர் மாதம் விவசாயிகள் வினியோகம் செய்த பச்சை தேயிலைக்கு தற்போது மாத விலை நிர்ணயிக்கப் பட்டு உள்ளது. இதன்படி மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் 50 பைசா எனவும் கூடுதல் தொகையாக ரூ.3 என மொத்தம் 13 ரூபாய் 50 காசு விலை நிர்ணயம செய்யப்பட்டு உள்ளது.

கைக்காட்டி தேயிலை தொழிற்சாலையில் 10 ரூபாய் 50 காசு மற்றும் கூடுதல்தொகையாக ரூ.2 என மொத்தம் ரூ.12.50 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. சாலீஸ்பரி, பந்தலூர் ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் மாத விலையாக ரூ.11.50 மற்றும் கூடுதலாக 50 காசு என மொத்தம் ரூ.12 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

விவசாயிகள் கவலை

குந்தா (எடக்காடு) தேயிலை தொழிற்சாலையில் 11 ரூபாய் 50 காசு எனவும், மகாலிங்கா, கிண்ணக்கொரை, பிக்கட்டி, பிதிர்காடு, பிராண்டியர் ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.11 எனவும், இத்தலார், மேற்கு நாடு, எப்பநாடு, கரும்பாலம் ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் 10 ரூபாய் 50 காசு என விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் 16 ரூபாய் என்று பச்சை தேயிலைக்கு விலை வழங்கப்பட்டது. இதன்படி அக்டோபர் மாத விலையில் செப்டம்பர் மாதத்தை விட 3 ரூபாய் விலை குறைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

### கோமாரி நோயை சரிப்படுத்த கள்மட்டி வழங்க கோரிக்கை

கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோயை சரிப்படுத்த வெளிமாநிலங்களில் இருந்து கள்மட்டி வாங்கித் தருமாறு அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக விவசாயிகள் சங்கத்தின் (கட்சி சார்பற்றது) பொதுச்செயலாளர் பி.கந்தசாமி, முதல்வர் ஜெயலலிதாவுக்கு எழுதியுள்ள கடித விவரம்: தமிழகத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் என்கிற வாய்ச் சப்பை நோய் பரவி, விவசாயிகளுக்குப் பெருத்த இழப்பை ஏற்படுத்தி வருகிறது. சில பகுதிகளில் தடுப்பு ஊசி போடப்பட்டு நோய் பரவாமல் ஓரளவு கட்டுக்குள் உள்ளது. எனினும், தடுப்பூசி போட்டு பத்து நாள்கள் கழிந்த பின்னரே நோய் எதிர்ப்பு சக்தி ஏற்பட்டு நோய் வராமல் தடுக்க இயலும். எனவே இந்த இடைப்பட்ட காலத்தில் நோயால் தாக்கப்பட்டு கால்நடைகள் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகின்றன. பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கள்மட்டி வாய்வழியாகக் கொடுக்கப்பட்டால் அவற்றின் வயிறு, வாய் மற்றும் கால்களில் உள்ள புண்கள் ஆறி சீக்கிரமாகக் குணமடைந்த நடைமுறை கடந்த காலங்களில் இருந்து வந்தது. இதை அறிவியல்பூர்வமாகவும் கால்நடை மருத்துவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். தமிழகத்தில் கள் இறக்குவது தடை செய்யப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களில் கள் இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், அங்கிருந்து மருத்துவப் பயன்பாட்டிற்காக கள்மட்டி வாங்கி வந்து கால்நடைகளுக்குக் கொடுக்கப்பட்டால் விரைவாக கோமாரி நோய் குணமடைய வாய்ப்பு உள்ளது. இதைப் பரிசீலித்து அனுமதி வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

### மஞ்சள் விற்பனையில் நவீன முறை

மஞ்சளை சுத்தம் செய்து தரம் பிரித்துக் கொண்டு வந்தால் நல்ல விலை கிடைக்கும் என, சத்தியமங்கலம் உதவி வேளாண்மை அலுவலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, புதன்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: சத்தியமங்கலம் வட்டாரம் அரியப்பம்பாளையம், புதுக்கலையனூர், உக்கரம், ஆலத்துக்கோம்பை, கே.என்.பாளையம் மற்றும் பவானிசாகர் வட்டாரம் பூசாரிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், தங்களது மஞ்சளை மின்னணு விற்பனை மூலமாக விற்பனை செய்யும் வசதி அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து, வேளாண்மை உதவி இயக்குநர் (பிரசாரம்) எம்.அல்தாப், உதவி வேளாண்மை அலுவலர்கள் டி.செந்தில்குமார், டி.தமிழ்ச்செல்வன் ஆகியோர்

விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். மஞ்சளைச் சுத்தம் செய்து தரம் பிரித்துக் கொண்டு வந்தால் தரத்திற்கேற்ப விலை கிடைக்க வாய்ப்புள்ளது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## மொடக்குறிச்சியில் கால்நடைத் துறை அதிகாரிகள் ஆய்வு

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்ட இலவச ஆடுகள் மற்றும் பயனாளிகள் குறித்து எம்.எல்.ஏ. மற்றும் கால்நடைத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். ஈரோடு மாவட்டத்தில் 2011-ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011-இல் 3,775 பயனாளிகளுக்கும், 2012-இல் 4,246 பயனாளிகளுக்கும், 2013-இல் 2,765 பயனாளிகளுக்கும் இலவச ஆடுகள் வழங்கப்பட்டு, அவை மூலமாக 36,275 குட்டிகள் ஈன்றுள்ளன. மொடக்குறிச்சி ஒன்றியம், குளூர் ஊராட்சியில் 2013-இல் 95 பயனாளிகளுக்கு ரூ.12 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பில் இலவச ஆடுகள் வழங்கப்பட்டன. இந்த ஆடுகளை மொடக்குறிச்சி எம்.எல்.ஏ. ஆர்.என்.கிட்டுசாமி மற்றும் கால்நடைத் துறை இணை இயக்குநர் வணங்காமுடி, உதவி இயக்குநர்கள் மோகன்குமார், தங்கவேல், உதவி மருத்துவர்கள் சக்திவேல், ராசாத்தி சாவடிப்பாளையம்புதூர் கால்நடை ஆய்வாளர் திலகவதி உள்ளிட்ட குழுவினர் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின்போது, ஒன்றியக் குழு துணைத் தலைவர் கணபதி, ஒன்றிய அதிமுக செயலாளர் காகம் மணி, குளூர் ஊராட்சித் தலைவர் சரஸ்வதி, ஆவின் இயக்குநர் அசோக், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் குருமூர்த்தி, பூவைத்தமிழன் கலந்து கொண்டனர்.

## உற்பத்தியாளர்களுக்கு பால் கறக்கும் எந்திரங்கள்

நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கறக்கும் எந்திரங்கள் வழங்கப்பட உள்ளதாக, உதகையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் முன்னிலையில் நடைபெற்றது. இதில், விவசாய சங்கத்தினர்களுடன் தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மற்றும் இதர துறைகளின் அலுவலர்கள் பங்கேற்றனர். அத்துடன், ஏற்கெனவே விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்டு உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு பெற்ற விவரங்கள், குறைதீர் கூட்டத்தில் பெறப்பட்ட 32 கோரிக்கைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்ட விவரங்களும் தெரிவிக்கப்பட்டன. மேலும், உதகை

ஒன்றியத்திற்குச் சொந்தமாக பாலகங்கள் செயல்படுவதாகவும், விரைவில் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கறக்கும் எந்திரங்கள் வழங்கப்படுமெனவும், நீலகிரி காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு டிவிடென்ட் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், தோட்டக்கலைத் துறை மூலமாக 50 சதவீத மானியத்தில் விதைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதேபோல, வேளாண் பொறியியல் துறை மூலமாக பவர் டில்லர் பம்ப் செட் திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், காட்டேரி நீர்ப்பிடிப்பு பகுதியில் நீரோடை தூர்வாரும் பணிகள் குறித்து விரைவில் தெரிவிக்கப்படுமெனவும், லவ்டேல் பகுதியில் ரிச்சிங் காலனிமுதல் டோபி காலனி வரை தார்ச் சாலை அமைக்கும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படுமெனவும் நகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், வன விலங்குகளால் விவசாயப் பயிர்கள் சேதமடைவதைத் தடுக்க வேட்டைத் தடுப்புக் காவலர்களை பணியிலமர்த்தி வன உயிரினங்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் வர விடாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், உண்ணிச்செடி எனப்படும் லேண்டானா செடிகளை வேருடன் பிடுங்கி அழித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் வனத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## "42 ஆயிரம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி'

நீலகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 42 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஆட்சியர் தெரிவித்துள்ளது:

நீலகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் பரவாமல் தடுக்க மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 42 ஆயிரம் கால்நடைகளுக்கு செப்டம்பர் மற்றும் அக்டோபரில் முழுமையாக தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், விடுபட்ட கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தாங்கள் வளர்க்கும் கால்நடைகளில் காய்ச்சல், வாயில் நுரை கலந்த உமிழ்நீர் ஒழுகுதல், வாய், நாக்கு, கால் குளம்பு மற்றும் மடியில் கொப்புளங்கள் தென்பட்டால் உடனடியாக அருகாமையிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு விவசாயிகள் தகவல் தெரிவிக்க வேண்டும். மேலும், கோமாரி நோய் பரவாமலிருக்க ஆரோக்கியமான கால்நடைகளை நோய் பாதித்தவைகளில் இருந்து விலக்கிப் பராமரிக்க வேண்டும். நோய் பாதித்த கால்நடையை மேய்ச்சலுக்கு அனுப்பக்

கூடாது. அக் கால்நடைகளின் கொட்டகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு வாளி தண்ணீருக்கு ஒரு கைப்பிடி சலவை சோடா எனப்படும் சோடியம் கார்பனேட் கலந்து தெளித்து சுத்தப்படுத்த வேண்டும். அதேபோல, நோயுள்ள பகுதிகளிலிருந்து கால்நடைகளை வாங்க வேண்டாம்.

### விவசாய சங்கங்கள் கூட்டமைப்பின் ஆலோசனைக் குழு கூட்டம்

தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் ஆலோசனைக் குழு கூட்டம், உதகையில் அமைப்பின் செயலர் செ.நல்லசாமி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கள் இயக்க மாநில அமைப்பாளர் இல.கதிரேசன், கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்க செயலர்கள் கோபிநாத் மற்றும் தங்கராசு முன்னிலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், எத்தனாலை வாகன எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்தி சென்னைமுதல் புதுதில்லி வரையிலான பிரசாரப் பயணம் நடத்தப்படவுள்ளது. பெட்ரோலிய இறக்குமதி மூலமாக ஆண்டுதோறும் இந்தியா ரூ.8 லட்சம் கோடிக்கும் மேல் அன்னியச் செலாவணி இழப்பைச் சந்தித்து வரும் சூழலில் அமெரிக்கா மற்றும் பிரேசில் நாடுகளைப் பின்பற்றி எத்தனாலை வாகன எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டும். இதை வலியுறுத்தி சென்னையிலிருந்து தில்லி வரையிலான பிரசாரப் பயணம் வரும் 17-ஆம் தேதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளது. அதைத்தொடர்ந்து தில்லியில் 20-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறும். 2014 பொதுத்தேர்தலை முன்னிட்டு எது காமராஜர் ஆட்சி என்ற புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இப் புத்தகம் ஏற்காடு தொகுதியில் கடந்த 4-ஆம் தேதி முதல் விநியோகிக்கப்பட்டது. ஆனால், இப் புத்தகம் காவல் துறையினரால் தடை செய்யப்பட்டுள்ளது. இத் தடையை உடனடியாக நீக்க வேண்டும். நாடு முழுவதும் கள் இறக்கி விற்பனை செய்வதென கடந்த அக்டோபர் 29-ஆம் தேதி திருச்சியில் தீர்மானிக்கப்பட்டது. இதன்பேரில் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து நீலகிரி மாவட்டம் முழுவதும் பிற மாவட்டங்களிலிருந்தும் கள் பெறப்பட்டு விற்பனை செய்யப்படும். அற வழியில் இப்போராட்டம் நடைபெறும். வெளிநாட்டு மது வகைகளும், டாஸ்மாக் மது வகைகளும் கள்ளை விடச் சிறந்தவை என நிரூபிப்போருக்கு ரூ.10 கோடி பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக டிசம்பர் 3-ஆம் தேதி திருச்சியில், அஸ்வமேத யாகம் நடத்தப்படும். இதில், பங்கேற்கும் குதிரையைத் தடுத்து நிறுத்தி விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று வெற்றி பெறுபவருக்கு ரூ.10 கோடி பரிசளிக்கப்படும். உணவுப் பற்றாக்குறையையும், பாசன நீர்த் தட்டுப்பாட்டையும் போக்கும் வகையில் சிறு தானியங்களையும், கருப்பட்டியையும் பங்கீட்டுக் கடைகள் மூலமாக அரசே மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். மேலும், காலம் தாழ்த்தாமல்

காவிரி நீர் மேலாண்மை வாரியத்தை நிறுவி காவிரி நீர் பங்கீட்டை ஒழுங்குபடுத்த வேண்டும். அப்போதுதான் எதிர்வரும் தண்ணீர் தட்டுப்பாடு காலங்களில் ஏற்படும் வறட்சியைச் சமாளிக்க முடியும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 100% மானியத்தில் பண்ணைக் குட்டைகள்

வேலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள 409 கிராமங்களிலும் 100 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு பண்ணைக்குட்டைகளை அமைத்து தர வேண்டும் என தமிழக அரசுக்கு பாஜக விவசாய அணி கோரிக்கை விடுத்துள்ளது. வேலூர் கிழக்கு மாவட்ட பாஜக விவசாய அணி செயல்வீரர்கள் கூட்டம் அரக்கோணத்தை அடுத்த நெமிலியில் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு விவசாய அணியின் வேலூர் கிழக்கு மாவட்ட தலைவர் சயனபுரம் கோ.அரிகிருஷ்ணன் தலைமை தாங்கினார். இதில் பாஜக விவசாய அணி மாநிலத் தலைவர் மலையம் சம்பத், மாவட்ட பாஜக தலைவர் பாபாஸ் பாபு, வேலூர் கோட்ட பொறுப்பாளர் குமரேசன், அணியின் மாவட்ட பொதுசெயலர்கள் ஆர்.ஜெயவேல், ஆர்.எல்லப்பன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.கே.லட்சுமிபதி ஒன்றிய நிர்வாகிகள் டி.பாலாஜி, ஜி.தமிழ்குமரன், ஜெ.கோபால், எம்.டி.காமராஜ், த.சங்கர், எம்.பிரதாபன், ஆர்.பாஸ்கர், தக்கோலம் தண்டபாணி, மோசூர் கமலக்கண்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இக் கூட்டத்தில் குஜராத்தில் கட்டப்பட இருக்கும் 503 அடி உயர சர்தார் வல்லபாய் படேல் உருவச்சிலைக்காக ஒரே மாதிரி இரும்பு தேவை என்பதற்காக வேலூர் கிழக்கு மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் விவசாயிகளிடம் பழைய இரும்பு கலப்பைகளை கேட்டு பெறுவது, மேலும் உருவாக்கப்படும் சிலையருகே அனைத்து கிராமங்களி0ல் இருந்தும் மண்களை குடுவைகளில் தனித்தனியே எடுத்துச்சென்று காட்சிக்கு வைப்பது, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாதந்தோறும் நடைபெறும் விவசாய குறைதீர் கூட்டத்துக்கு பாஜக விவசாய அணிக்கு தகவல் தர ஆட்சித் தலைவருக்கு கோரிக்கை விடுப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி பயிற்சி

அம்மாபாளையம் கிராமத்தில் அட்மா திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி பயிற்சி நடைபெற்றது. மேற்கு ஆரணி ஒன்றியம், அம்மாபாளையம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் 25 விவசாயிகளுக்கு பண்ணைப்பள்ளி வகுப்புகள் நடைபெற்றது. இதில் மேற்குஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை தாங்கினார். அம்மாபாளையம் கிராமத்தில் உள்ள மஞ்சள் பயிர் சாகுபடி செய்யும் முன்னோடி விவசாயி ஏ.வி. சுப்பிரமணி ஒருங்கிணைந்த மஞ்சள் பயிர் பாதுகாப்பு என்ற நோக்கத்தில்

வகுப்பு எடுத்தார். இதில் விவசாயிகளுக்கு கிழங்கு நேர்த்தி உள்ளிட்ட மஞ்சள் சாகுபடியின் முக்கிய நிலைகள் குறித்து விளக்கப்பட்டது. அட்மா திட்ட வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் அ.சுமித்ரா என்பவர் பண்ணைப்பள்ளியின் நோக்கம், முக்கியத்துவம் குறித்த மஞ்சளின் ஆறு முக்கிய நிலைகளைக் கூறினார். தோட்டக்கலை உதவி அலுவலர் கு.மஞ்சுளா, அட்மா திட்ட பொருள் சிறப்பறிஞர் பா.முத்து உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## காய்கறிகள், பழங்களைப் பாதுகாக்க குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்கப்படும்

பாப்பிரெட்டிப்பட்டியில் காய்கறிகள், பழங்களைப் பாதுகாக்கக் குளிர்ப்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார். இதுகுறித்து அரூரில் அவர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியது: தருமபுரி மாவட்ட மக்கள் அதிகம் பேர் விவசாயத்தை நம்பியுள்ளனர். இந்த மாவட்ட மக்கள் விவசாயத்தில் முன்னேற்றம் அடையவும், விவசாய விளைபொருள்களை அதிக விலையில் விற்பனை செய்யும் நோக்கிலும் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மழைக் காலங்களில் தக்காளி, கேரட், பீட்ரூட், ஆப்பிள், வாழைப் பழங்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அழுகிவிடும் சூழல் உள்ளது. அதேபோல, காய்கறிகள் திடீரென சில நேரங்களில் விலை குறைந்து விடும். ஓரிரு வாரங்களில் அதிக விலைகள் கிடைக்கும். இதைக் கருத்தில் கொண்டு அரூர், பென்னாகரம், தருமபுரி, பாலக்கோடு ஆகிய இடங்களில் 25 மெட்ரிக் டன் காய்கறிகளைச் சேமிக்கும் வகையில் குளிர்ப்பதன வசதியுடன் கூடிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், இதே இடங்களில் மஞ்சள், புளி, மிளகாய் உள்ளிட்ட விவசாய விளைபொருள்கள் சுமார் 2 ஆயிரம் மெட்ரிக் டன் பொருள்களைச் சேமித்து வைக்கும் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. தற்போது பாப்பிரெட்டிப்பட்டியில் 2 ஏக்கர் பரப்பளவில் காய்கறிகளைப் பாதுகாக்கவும், விவசாய விளைபொருளை சேமித்து வைக்கும் வகையில் கிடங்குகள் அமைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு கடனுதவி:

மஞ்சள், பருத்தி, புளி, மிளகாய் உள்ளிட்ட விவசாய விளைபொருள்களை சேமிப்புக் கிடங்குகளில் பாதுகாத்து வைக்கும் விவசாயிகளுக்கு பொருள்களின் மதிப்பில் 50 சதம் கடனுதவியாக வழங்கப்படும். இதற்கான வட்டி விகிதம் 5 சதமாகும். கடனுதவியாக விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் வரையிலும், வியாபாரிகளுக்கு ரூ.ஒரு லட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படும். வியாபாரிகளுக்கு வழங்கப்படும் கடனுக்கு 9 சதம் வட்டி வசூல் செய்யப்படும். முன்னதாக, அரூரில் ஒழுங்குமுறை விற்பனை மைய வளாகத்தில்

(இலங்கைத் தமிழர்கள் குடியிருப்பு) கட்டப்பட்டு வரும் சேமிப்புக் கிடங்கின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது தனி அலுவலர் இ.செல்வம், செயலர் பொ.முருகேசன், கண்காணிப்பாளர் து.கிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

### நவ.21-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரியில் வருகிற 21-ஆம் தேதி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆட்சியர் டி.பி. ராஜேஷ் தலைமையில் அன்று முற்பகல் 11 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெற உள்ளது. இதில், விவசாயிகள் தங்களது குறைகளைத் தெரிவித்து, நிவர்த்தி செய்து கொள்ளலாம் என, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அரியலூரில் பால் உற்பத்தியை மேம்படுத்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி: ஆட்சியர்

அரியலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் தூய பால் உற்பத்தி மற்றும் பாலின் தரத்தை உயர்த்த கட்டுமானப் பணி மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ், 2010-11 ஆம் ஆண்டில் விளாங்குடி கைகாட்டியில் 2, ஜயங்கொண்டம், கீழப்பழூவூரில் 4 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் ரூ. 82.7 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு விளாங்குடி கைகாட்டி, கீழப்பழூவூர் குளிர்விப்பான்கள் செயல்பட்டு வருகிறது. ஜயங்கொண்டம் குளிர்விப்பான் நவ. 30-க்குள் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2012-13 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 6 சமூகப் பணியாளர்களைக் கொண்டு ரூ. 16.83 லட்சம் மதிப்பீட்டில் 90 சங்கங்கள் நிறுவப்பட்டு, இதில் 65 பால் உற்பத்தியளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2012-13 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க ஜயங்கொண்டம், அரியலூர் பகுதிகளில் கால்நடை மருத்தவ ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டு ரூ. 7.56 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பாலின் தரத்தை அறிய 12 மில்க் அனலைசர் ரூ. 4.38 லட்சம் மதிப்பீட்டில் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 1655 மெ.டன் கிலோ

ஒன்றுக்கு ரூ.4 வீதம் பசுந்தீவனம் கொள்முதல் செய்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இதுவரை ரூ. 47.31 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல, கால்நடை அடர் தீவனம் ரூ. 51.83 லட்சம் மானியத்தில் 1250.74 மெ.டன் வழங்கப்பட்டுள்ளது. 2013-14 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட கேன்கள் 250 எண்ணிக்கையும், எலக்ட்ரானிக் எடை இயந்திரங்கள் 10 எண்ணிக்கையும் வாங்கி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றார் ஆட்சியர்.

## கோமாரி நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க யோசனை

கோமாரி நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாப்பது குறித்து கரூர் பண்டுதகாரன்புதூர் கால்நடை ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் ந. அகிலா யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோமாரி நோய் என்பது, மாடு, ஆடு, பன்றிகள் உள்ளிட்ட கால்நடைகளை தாக்கி பொருளாதார இழப்பை ஏற்படுத்தக்கூடிய கொடி தொற்று நோயாகும். இந்த நோயை கிராமப்புறங்களில் கால்கட்டு மற்றும் வாய்ச்சப்பை என்றும் அழைப்பர். நோயின் அறிகுறிகள்: நோயுற்ற கால்நடைகளுக்கு கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு மற்றும் குளம்புகளுக்கு இடையே கொப்பளங்கள், புண்கள் காணப்படும். இந்த நோய்த் தாக்குதலால் பால் உற்பத்தி குறைந்து கறவை மாடுகள் சினைப் பிடிப்பது தடைபடும். கடுமையான இந்நோய்த் தாக்குதலால் 50 சதவீத மாடுகள் இறக்க நேரிடும். நோய்த் தடுப்பு முறை: தற்போது, இந்த நோயின் தாக்கம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் காணப்படுகிறது. இதனால், புதிதாக சந்தைகளில் கால்நடைகளை வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். மாட்டுக் கொட்டகையை சுகாதாரமாகப் பராமரிக்க வேண்டும். சுண்ணாம்புத்தூளை கொட்டகைக்குள் தெளிக்க வேண்டும். மேய்ச்சல் நிலங்களில் கோமாரி நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளை மேய விடக் கூடாது. கோமாரி நோய்த் தாக்கப்பட்ட மாடுகளை தனிமைப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மாடுகளின் கால் மற்றும் வாய்ப் பகுதியை ஒரு சதவீதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு நாள் ஒன்றுக்கு 3 முதல் 4 முறை கழுவ வேண்டும். புண்களின் மீது கிளிசரின் தடவ வேண்டும். இவ்வாறு கடைப்பிடிப்பதன் மூலம் மாடுகளை கோமாரி நோயின் தாக்கத்தில் இருந்து காப்பாற்றலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பேராவூரணியில் வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

பேராவூரணி வேளாண் கோட்டத்தில் 2013-14-ம் ஆண்டில் வேளாண் துறை மூலம் செயல்படுத்திய திட்ட அமலாக்கம் குறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜே. சேகர் அண்மையில் ஆய்வு மேற்கொண்டார். சித்தாதிக்காடு கிராமத்தில் பாலசுப்பிரமணியன் வயலில் நேரடி நெல் விதைப்பை பார்வையிட்டு அவர் ஆலோசனை வழங்கினார். செருவாவிடுதி கலைமணி வயலில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்துள்ள பிபிடி 5204 ரகம் குறித்து ஆய்வு செய்தார். 100 சதம் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு பணி மேற்கொள்ள பேராவூரணி வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட்ட திருச்சிற்றம்பலம் கிழக்கு பகுதியில் நெல் வயல்களில் இயந்திர முறையில் நெல் நடவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதை இணை இயக்குநர் பார்வையிட்டார். புனல்வாசல் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள தென்னை உலர்கலன் கூடாரத்தை ஆய்வு செய்து உலர்கூடாரம் சிறப்பாக இயங்க மானியத்தில் சோலார் மின் இணைப்பு பெற ஆலோசனை வழங்கினார். ஆய்வின்போது, பேராவூரணி வட்டார உதவி இயக்குநர் எஸ். ஈஸ்வர். வேளாண்மை அலுவலர் கா. முருகேசன், "அட்மா' திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுரேஷ் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விவசாயிகள் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தல்

விவசாயிகள் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்றார் கிரிப்கோ நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் குளோரியா. பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகே உள்ள அன்னமங்கலம் கிராமத்தில், இந்திய உரக் கூட்டமைப்பு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் கிரிப்கோ உர நிறுவனம் சார்பில் புதன்கிழமை நடைபெற்ற மண்வள மேம்பாடு குறித்த கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது: இந்தியாவில், 60% சாகுபடி நிலங்களில் ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ளது. இதைத் தவிர்க்க, ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடிக்க வேண்டும். பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பு மண் பரிசோதனை செய்து, நிலத்திற்கு தேவையான உரங்களை இட வேண்டும். இவ்வாறு உரமிடும்போது, ரசாயன உரங்களை மட்டும் இடாமல், தொழு, உயிர், பேரூட்ட மற்றம் நுண்ணூட்ட உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் சரியான தருணத்தில் அளிப்பதன் மூலம், மண்ணில் உள்ள சத்துப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுவதோடு கூடுதல் மகசூல் பெறலாம். நிலத்தில் இடக்கூடிய ரசாயன உரங்கள், பயிருக்கு கிடைக்கக்கூடிய தன்மைக்கு மாற்றம் பெறுவதற்கு உயிர் உரமும், தொழு உரமும் மிகவும் அவசியமானது. இவற்றை பயன்படுத்தாத நிலங்களில் இடக்கூடிய உரங்கள் வீணாகிவிடும் என்றார் அவர். தொடர்ந்து, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன்

நுண்ணூட்டச் சத்துக்களின் அவசியம் குறித்து பேசினார். கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகளுக்கு மரக்கன்றுகள், வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், கிரிப்கோ நிறுவனத்தின் மாநில மேலாளர் அருணாச்சலம், மண்டல மேலாளர் ராம்குமார், உதவி மேலாளர் மு. ஜெகநாதன், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய மண் ஆய்வக தொழில்நுட்பவியலர் என். சதீஷ்குமார், ரோவர் வேளாண் கல்லூரி பேராசிரியர் முனைவர் ஹரிராம், உதவிப் பேராசிரியை பரமேஸ்வரி, தோட்டக்கலை அலுவலர் ஆனந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பி. வெங்கடேசன் வரவேற்றார். இந்திய உரக் கூட்டமைப்பு புள்ளியியல் துறை அலுவலர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

## தோட்டக்கலைத் துறை விற்பனையகம் திறப்பு

புதுச்சேரி எல்லைபிள்ளைச்சாவடியில் நவீன தோட்டக் கலை விற்பனையகத்தை முதல்வர் என்.ரங்கசாமி வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார். புதுவை குரும்பாப்பட்டில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் நகரில் இருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ளதால் பொது மக்களால் எளிதில் வந்து செல்ல முடியவில்லை. இக் குறைப்பாட்டைப் போக்கும் வகையில் வில்லியனூர் சாலை எல்லைப்பிள்ளைச்சாவ டியில் நவீன தோட்டக் கலை விற்பனையகத்தை திறந்து வைத்து முதல் விற்பனையை முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார். மேலும் அருகே அமைக்கப்பட்டுள்ள அருமை சத்துணவு மையத்தையும் முதல்வர் திறந்தார். உள்ளாட்சித் துறை அமைச்சர் ஜி. பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள், வாரிய தலைவர்கள், வேளாண்மை துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் தோட்டக் கலை விற்பனையகம் குறித்து காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் சுரேஷ் கூறியதாவது:

புதுவை பகுதி விவசாயிகள் பயன் அடையும் வகையில் விவசாயம், கால்நடை, தோட்டக் கலை, வேளாண் பொறியியல், மனையியல் போன்றவற்றில் உயரிய தொழில் நுட்பங்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் எங்கள் நிலையத்தின் சார்பில் வழங்குகிறோம். புதுவையின் அனைத்துப் பகுதி விவசாயிகளும் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளவும், செடிகளை எளிதில் எடுத்துச் செல்லும் வகையிலும் நகரப் பகுதியில் விற்பனையகம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் "அருமை' என்ற பெயரில் எங்களிடம் பயிற்சி பெற்றவர்களால் தயாரிக்கப்படும் சத்துமாவு, ஜாம்கள், ஊறுகாய் வகைகள், காளான் சூப், பக்கோடா, நூடுல்ஸ் போன்றவையும் விற்கப்படும் என்றார்.

தினகரன்

## கோமாரி கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை இயற்கை மருத்துவத்தை நம்பும் மக்கள்

திருவாரூர், : ஆங்கில சிகிச்சை முறையால் கோமாரி நோயை கட்டுப்படுத்த முடியாததால், மக்கள் இயற்கை மருத்துவத்தை நம்ப தொடங்கி உள்ளனர். அலோபதி எனப்படும் ஆங்கில சிகிச்சை முறை, இயற்கை சிகிச்சை முறை களான சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளன. தமிழகத்தில் சிக்குன் குன்யா, பன்றி, டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பலர் இறந்தனர். இந்த நோய்களுக்கு அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரிகளில் தனி வார்டுகள் அமைக்கப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு தடுப்பூசிகள் மற்றும் மாத்திரைகள் சாப்பிட்டாலும் இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட நிலவேம்பு சாறு உட்கொண்டால் மட்டுமே இந்த நோயினை கட்டுப்படுத்த முடியும் என்று அரசு மூலம் அறிவிக்கப்பட்டு அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக வழங்கப்பட்டது. அதேமுறை தற்போது மாடுகளை தாக்கிய உள்ள கோமாரி நோயை கட்டுப்படுத்தவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நாகை, திருவாரூர் மாவட்டங்களில் கோமாரி நோய் வேகமாக பரவி வருகிறது. நோய் தாக்கி ஆயிரக்கணக்கான மாடுகள் இறந்துள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 80 மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டு மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் நோய் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகளை கோமாரி நோய் தாக்கியுள்ளது. கோமாரியை ஆங்கில சிகிச்சை முறை மூலம் கட்டுப்படுத்த முடியாததால் இயற்கை முறையில் சிகிச்சை அளிக்க கலெக்டர் நடரா ஜன் பரிந்துரை செய்து வருகிறார். ஆடுதொடா, வேம்பு, துளசி, வில்வம், வாத நாராயணன் உட்பட பல்வேறு இலை களை கொண்டும் அதில் உப்பு, புளி, மஞ்சள், சீரகம், வெந்த யம், பனை வெல்லம் என பல்வேறு இயற்கை பொருட்களை சேர்த்து பொடி செய்து உருண்டையாக்கி அதனை மாடுகளுக்கு கொடுக்க கலெக்டர் பரிந்துரை செய்துள்ளதையடுத்து அதனை பொது மக்கள் கொடுத்து வருகின்றனர். எத்தனை சிகிச்சை முறைகள் வந்தாலும் இயற்கை சிகிச்சை முறைக்கு ஈடு எதுவும் இல்லை என்பது இதன் மூலம் தெரியவருகிறது. மேலும் 3 மாடு பலி: நீடாமங்கலம் ஒன்றியத்தில் நேற்றுமுன்தினம் 14 மருத்துவ குழு அமைக்கப்பட்டு, நோய் பாதித்த 1,053 மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று நடுப்படுவையில் மதிராஜ், ரவிச்சந்திரன், பூரணம் ஆகியோரது மாடுகள் இறந்தது. இதுவரை இந்த ஒன்றியத்தில் 14 மாடுகளும், 7 கன்றுகளும் இறந்துள்ளது.

## திருவாரூர் மாவட்டத்தில் உர விற்பனை கண்காணிக்க 3 பறக்கும் படை அமைப்பு

திருவாரூர்,: திருவாரூர்மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தனசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருவாரூர் மாவட்டத்தில் விவசாயத்திற்குரிய உரம், பூச்சி மருந்துகள் கொள்முதல் செய்வது, விற்பனை செய்வது, இருப்பு வைப்பது ஆகியவற்றினை கண்கானிப்பதற்காக மாவட்ட துணை இயக்குநர்கள் மயில்வாகனன், கணேசன் மற்றும் உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் ஆகிய 3 பேரை தலைமையாக கொண்டு 3 பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் மாவட்டம் முழுவதும் உள்ள பூச்சி மருந்து மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை நிலையங்களுக்கு சென்று ஆய்வு நடத்தி வருகின்றனர். வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வரப்படும் பூச்சி மருந்துகள் உரிய அனுமதி பெற்றுள்ளதா என்றும் அதற் கான சான்றுகள் உள்ளதா என்றும் இக் குழுவினர் ஆய்வு நடத்தி வருகின்றனர். மேலும் விற்பனை செய்யப்படும் பூச்சி மருந்தில் கலப்படம் உள்ளதா என்றும் இருப்பு வைக்கப்பட்டுள்ள பூச்சி மருந்தில் காலாவதியான மருந்துகள் உள்ளனவா என்றும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு மேற்கொண்ட ஆய்வில் திருவாரூரில் உள்ள மொத்த விற்பனை கடை ஒன்று நடைமுறையினை பின்பற்றாதது தெரியவந்துள்ளதால் அந்த கடையின் விற்பனையினை முடக்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இதே போல் நடைமுறையினை பின்பற்றாத விற்பனை நிலையங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## தவிடு, குருணையில் இருந்து பொருட்கள் தயாரிக்க பயிற்சி

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் அரிசி தவிடு, முளைக்கரு மற்றும் குருணை போன்ற உபரிப் பொருட்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பொருள்கள் தயாரித்தல் பயிற்சி நிலைய தலைவர் சோழன் தலைமையில் நடந்தது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நீர் தொழில்நுட்ப மையத் தின் பேராசிரியர் ராமநாதன், இந்திய பயிர்பதன தொழில் நுட்ப கழக விஞ்ஞானிகள் சௌமி, அனிதா கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். 30க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை திட்ட உதவியாளர் ரேகா செய்திருந்தார். முதுநிலை ஆராய்ச்சியாளர் ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் 21ம் தேதி நடக்கிறது

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வரும் (21ம் தேதி) விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது. இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 21ம் தேதி, காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்குகிறார். கூட்டத்தில் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட நிர்வாகம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

## உரம், விதைகளை இலவசமாக அரசு வழங்க வேண்டும் விவசாயிகள் சங்கம் கோரிக்கை

கிருஷ்ணகிரி, : விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் உரங்களை, தமிழக அரசு இலவசமாக வழங்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய முதல் மாநாடு நடந்தது. ஒன்றிய பொறுப்பாளர் கனகராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் கண்ணு மாநாட்டை துவக்கி வைத்து, சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநிலக்குழு உறுப்பினர்கள் வெங்கடாசலம், ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் சிவராஜ், வட்டத்துணை தலைவர் தேவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர்கள் சின்னசாமி, நரசிம்மன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். பின்னர் மத்தூர் ஒன்றிய புதிய நிர்வாகிகளாக மகேந்திரன், கோவிந்தராஜ், சீனிவாசன், பிரபு, சுந்தரவடிவேலு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநில துணைத் தலைவர் லகுமையா பேசினார். மாநாட்டில், விவசாயிகளுக்கு விதை, உரங்களை அரசு இலவசமாக வழங்க வேண்டும். 60 வயது நிறைவடைந்த விவசாயிகளுக்கு மாதம் ரூ3 ஆயிரம் ஓய்வூதியமாக வழங்க வேண்டும். மத்தூர் பகுதியில் காய்ந்து போன மா, தென்னை உள்ளிட்ட மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகி சிங்காரம் நன்றி கூறினார்.

## கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை கட்டுப்படுத்த மருத்துவ பேராசிரியர் ஆலோசனை

கரூர், : கரூர் பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அகிலா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கோமாரி நோய், மாடு, எருமை, ஆடு, பன்றிகள் ஆகிய கால்நடைகளை தாக்கி மிக அதிக அளவி லான பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் கொடிய தொற்றுநோய். இதை கிராமப்புறங்களில் கால்கட்டு மற்றும் வாய் சப்பை என்று அழைப்பர். இந்த வியாதியானது பீக்கோர்னா எனப்படும் மிகசிறிய வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. அதிவிரைவில் பரவக்கூடிய இந்த நச்சுயிரி பிளவுபட்ட குழம்புகள் கொண்ட கால்நடைகள் அனைத்தையும் தாக்கும். நோயுற்ற கால்கடைகளில் கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு இடையே கொப்புளங்கள், புண்கள் காணப்படும். இந்நோயுற்ற கால்நடைகள் உமிழ்நீர், பால், சிறுநீர், சாணம் மேலும் உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத்தொட்டிகள், தீவனம், காற்றின் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்த வியாதி பரவுகின்றன. இந்நோய் தற்போது தமிழகத்தின் பல மாவட்டங்களில் கால்நடைகளை தாக்கியுள்ளது. எனவே புதிதாக சந்தைகளில் இருந்து கால்நடைகள் வாங்குவதை தவிர்க்க வேண்டும். மாட்டுக்கொட்டகையை சுகாதாரமாக பராமரிக்க வேண் டும். சுண்ணாம்புத் தூளை பண்ணையில் தெளிக்கவேண்டும். மேய்ச்சல் நிலங்களில் நோய் பாதிக்கப்பட்ட மாடுகளை மேய அனுமதிக்கக் கூடாது. கோமாரி நோய் தாக்கப்பட்ட கால்நடைகளை தனிமைப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மாடுகளின் கால், வாய்ப்பகுதியை 1சதவீதம் பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு ஒருநாளைக்கு 3-4 முறை கழுவ வேண்டும், புண்களின் மீது கிளிசரின் தடவ வேண்டும். அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையை அணுகி முறையான சிகிச்சை அளிக்க வேண்டும். தஞ்சை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மைய தலைவர் முனைவர் புண்ணியமூர்த்தியின் கோமாரி நோய்க் கான மரபுசாரா மூலிகை மருத்துவ முறைகள் வருமாறு- சீரகம் 20கிராம், வெந்தயம் 20கிராம், மிளகு 20கிராம், மஞ்சள்பொடி 20கிராம், பூண்டு 4பல், வெல்லம் 100கிராம், தேங்காய் துருவல் ஒரு தேங்காயில் இருந்து எடுத்துக் கொள்ளவேண்டும். சீரகம், வெந்தயம், மிளகு ஆகியவற்றை ஒருமணிநேரம் ஊற வைத்து அரைத்து, அதனுடன் மஞ்சள்பொடி, பூண்டு, வெல்லம் ஆகியவற்றை சேர்த்து, தேங்காய் துருவலுடன் பிசைந்து கொள்ள வேண்டும். இதனை சிறுசிறு உருண்டைகளாக்கி பாதித்த கால்நடைகளுக்கு வாய் வழியாக ஒரு நாளைக்கு ஒருவேளை வீதம் ஐந்து நாட்களுக்கு கொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட கால்நடைகளின் கால் புண் குணமடைய, நல்

லெண்ணை ஒருலிட்டர், பூண்டு 10பல், மஞ்சள்பொடி 10கிராம், துளசிஇலை 10எண்ணிக்கை, குப்பைமேனி இலை 10எண்ணிக்கை, மருதாணி இலை 10, வேப்பிலை 10எண்ணிக்கை என அனைத்தையும் அரைத்து நல்லெண்ணையில் கலந்து பத்து நிமிடம் சூடேற்றி ஆறிய பிறகு கால் மற்றும் குளம்பு பகுதியில் தடவி வர புண் குணமடையும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## இலுப்பூர் வேளாண் கடன் சங்கத்தில் கூட்டுறவு வார விழா

இலுப்பூர்,: இலுப்பூர் கூட்டுறவு வேளாண்மை கடன் சங்கத்தில் கூட்டுறவு வார விழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது. கூட்டுறவு வேளாண் கடன் சங்கங்களில் ஆண்டு தோறும் நவம்பர் 14ம் தேதி முதல் 20ம் தேதி வரை கூட்டுறவு வார விழா நடைபெற்று வருகிறது.இதையடுத்து இந்த ஆண்டுக்கான கூட்டுறவு வார துவக்க விழா இலுப்பூர் கூட்டுறவு கடன் சங்கத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் சின்னதம்பி கூட்டுறவு கொடியை ஏற்றினார். விழாவில் இலுப்பூர் வேளாண்மை கடன் சங்க செயலாளர் செல்வராஜ், இலுப்பூர் அதிமுக நகர செயலாளர் கோபால், துணைத் தலைவர் லட்சுமி, இயக்குனர் பொன்னன் உட்பட வங்கி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கும் விழா

நாகர்கோவில்: ஆரல்வாய்மொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் பெருமக்களுக்கு கடனுதவி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பச்சைமால் கலந்து கொண்டு கடனுதவிகளை வழங்கினார். இதில் 25 வேளாண் பெருமக்களுக்கு தலா ஒரு லட்சம் வீதம் 25 லட்சம் மதிப்பிலான கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கு கடனுதவிகளை அமைச்சர் பச்சைமால் வழங்கினார். விழாவில் துணைத்தலை வர் சுதாபாலகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் பரமசுந்தரராஜ், ஆரல்வாய்மொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் கிருஷ்ணகுமார், செய லாளர் சகாய திலகராஜ், பேரூராட்சி தலைவர் பத்மாவதி நாகபாலகிருஷ் ணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் தாணுப்பிள்ளை, வழக்கறிஞர் சிவசெல்வராஜன், காரவிளை செல்வன், ராஜன் உள்பட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்ட னர்.
கோமாரி நோய் தாக்குதல் எதிரொலி பண்ணாரி சோதனை சாவடியில் கால்நடைகள் தீவிர கண்காணிப்பு சத்தியமங்கலம், . ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளை கோமாரி நோய் தாக்கியதையடுத்து அண்டை மாநிலங்களிலிருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படும் கால்நடைகளை கண்காணிக்கும் பொருட்டு பண்ணாரி சோதனைச்சாவடியில்

கால்நடைத்துறையினர் தணிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த ஒரு மாதகாலமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் அதனைக் கட்டுப்படுத்த கால்நடை பராமரிப்புத்துறையினர் தடுப்பூசி போட்டு வருகின்றனர். வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படும் கால்நடைகள் மூலம் நோய் பரவ வாய்ப்புள்ளதால் சந்தைகள் கூடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கு மாறு மாவட்ட ஆட்சியர் சண்முகம் உத்தரவிட்டுள்ளார். மேலும் வெளிமாநிலங்களிலிருந்து வாகனங்களில் நோய் தாக்கிய மாடுகள் கொண்டுவருவதை சோதனைச்சாவடி அமைத்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோபி கால்நடைபராமரிப்புத்துறை உதவி இயக்குனர் பழனிச்சாமி அறிவுரையின் பேரில் பண்ணாரியில் உள்ள கால்நடைபராமரிப்புத்துறையின் பறவைக்காய்ச்சல் தடுப்பு சோதனைச்சாவடியில் 24 மணி நேரமும் கால்நடைத்துறை அதிகாரிகள் வெளிமாநிலங்களிலிருந்து நோய் தாக்கிய மாடுகள் கொண்டுவரப்படுகிறதா என கண்காணித்து வருகின்றனர். இதுகுறித்து ராஜன்நகர் கால்நடை மருத்துவர் தங்கவேல் கூறுகையில், ‘வெளிமாநிலத்திலிருந்து லாரிகளில் விற்பனைக்கு கொண்டுவரப்படும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்ட சான்றிதழ் உள்ளதா எனவும், சான்றிதழுடன் கொண்டுவரப்படும் கால்நடைகள் ஆரோக்கிமாக உள்ளதா எனவும் பரிசோதிக்கப்படுகிறது. நோய் தாக்கிய மற்றும் சான்றிதழ் இல்லாமல் கொண்டுவரப்படும் வாகனங்களை அனுமதிக்காமல் திருப்பி அனுப்பி விடுகறோம்‘ என்றார்.